# முதியோர் தோல் நலன் பராமரிப்பில் அக்கறை அவசியம்

தாம்பரம், ஆக27: முதியோர்கள் தோல் நலன் பராமரிப்பில் போதிய அக்கறை செலுத்துவது அவசியம் என்று ஸ்ரீ பாலாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தோல் மருத்துவத்துறை தலைவர் டாக்டர் டி.மனோகரன் வலியுறுத்தினார்.

குரோம்பேட்டை ஸ்ரீபாலாஜி மருத்துவக்கல்லூரியில் வியாழக்கிழமை நடைபெற்ற முதியோர் தோல் நலன் குறித்த தேசிய அளவிலான கருத்தரங்கில் அவர் மேலும் பேசியது:



ஸ்ரீ பாலாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற கருத்தரங்கில் பங்கேற்ற கல்வி ஆலோசகர் வீரபாகு, முதல்வர் ஜான்சன், கண்காணிப்பாளர் சசிக்குமார், துறைத் தலைவர் டி.மனோகரன் உள்ளிட்டோர்.

முதுமை காரணமாக ரத்த ஓட்டம் குறைந்து தோலில் சுருக்கம் ஏற்படுகிறது. தோலில் இயற்கையாக சுரக்கும் எண்ணெய்ப் பசை குறையும். தோல்திசுக்களின் காயம் ஆறும் திறன் குறைந்து தோல் வறண்டு வெடிப்பு நிலை சிலருக்கு ஏற்படும். தோல் மேற்புறத்தில் தொடர் அரிப்பு ஏற்பட்டு உள்ளிருக்கும் நோய் குறித்த அறிகுறிகளை வெளிப்படுத்தும். சிலருக்கு தோல் புற்றுநோய் வர வாய்ப்புள்ளது.

சர்க்கரை நோயாளிகளுக்கு தோல் உள்புறம் படர்ந்த மிக நுண்ணிய நரம்புகள் பாதிக்கப்பட்டு உணர்ச்சியற்ற நிலை ஏற்படும்.

அந்த நிலையில் முள், ஆணி குத்தினால் உணர்ச்சி இருக்காது. முதியோர் சர்க்கரை நோயைக் கட்டுக்குள் வைத்து இருப்பதுடன், மாவுச்சத்து உணவைக் குறைத்து புரதச் சத்து அதிகமுள்ள உணவை எடுத்துக் கொள்ள வேண்டும். தோல் சுருக்கம், வறட்சிக்கு தேங்காய் எண்ணெய் பயன்படுத்துவதைத் தவிர்த்து ஆலிவ், பாரபின் எண்ணெய் பயன்படுத்தலாம். பெரும்பாலான முதியோர் போதிய பராமரிப்பின்மை காரணமாக பல்வேறு தோல் நோய் பாதிப்புள்ளாகும் நிலை உள்ளதால் போதிய விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியம் என்றார் அவர்.

மருத்துவக் கல்லூரி முதல்வர் ஜான்சன், துணை முதல்வர் தங்கா, மருத்துவக் கல்வி ஆலோசகர் வீரபாகு, கண்காணிப்பாளர் சசிக்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.